Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 363
வியாழக்கிழமை 24 நவம்பர் 2022
கார்த்திகை 08 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 12 விலை : ரூ. 50

நவ. 30க்கு முன்

## சாதாரண தர பரீட்சை முடிவு

கொழும்பு, நவ.24
கல்விப் பொதுத் தர சாதாரன தரப் பரீட்சைப் பெறு 12

வல்லைப் பாலத்தில்

## நீருக்குள் மூழ்கியவர் சடலமாக நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், நவ.24
யாழ்ப்பாணம், வல்லைப் பாலத்திலிருந்து நீரில் வீழ்ந்து காணா மற்போயிருந்த இளைஞர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார். புத்தூர், கலை 12

## சமிக்ஞையை மீறியதால் ஒரு மாதம் சிறை

யாழ்ப்பாணம், நவ.24
பொலிஸாரின் சமிக்ஞையை மீறி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவருக்கு பருத்தித்துறை 12

## ஆசிரியர் மீது தாக்குதல்; சந்தேகநபர் சரண்

யாழ்ப்பாணம், நவ.24
யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிக்குள் நுழைந்து ஆசிரியரைத் தாக்கிய குற்றச் சாட்டில் தேடப்பட்டு வந்தவர் நேற்று 12

## கந்தர்மடம் விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், நவ.24
யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் நேற்று புதன்கிழமை மாலை நடந்த விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மோட்டார்சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையே விபத்துக்குக் காரணம் என்று 03

## மோசடியாளர் உள்ளவரை சர்வதேச உதவிகள் கிட்டா

### மைத்திரிபால சிறிசேன ஆதங்கம்



கொழும்பு, நவ.24
அரச நிர்வாகத்துக்குள் பெரும் மோசடிக்காரர்கள் இருக்கும்வரை சர்வதேசத்திடம் இருந்த எந்த உதவியும் கிடைக்காது. ஊழல், மோசடிகள் நிறைந்த நாட்டைக் கட்டியெழுப்புவது இலகுவான விடயம் அல்ல - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி 11

டிசெம்பர் 11க்குப் பின்னர்

# அதிகாரப் பகிர்வு தொடர்பில் சர்வகட்சிகளுடன் சந்திப்பு!

### நாடாளுமன்றத்தில் ரணில் அறிவிப்பு



கொழும்பு, நவம்பர் 24

அதிகாரப் பகிர்வு தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர் சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 11

## இ.போ.ச. பஸ் மோதி மாணவன் படுகாயம்

யாழ்ப்பாணம், நவ.24
பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வசாவிளான் சந்தியில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் மோதியதில் 12 வயது மாணவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை 6.15 மணி 12

## ஆட்சியைக் கவிழ்க்க முயன்றால் இராணுவமே இனிமேல் பதிலளிக்கும்!

### போராட்டத்தில் ஈடுபடுவோருக்கு ஜனாதிபதி பகிரங்க எச்சரிக்கை

கொழும்பு, நவம்பர் 24
ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக மீண்டுமொரு போராட்டம் நடத்தப்படும் என்று கூறப்படுகின்றது. அதற்கு நான் இடமளிக்கப் போவதில்லை. இராணுவத்தை களமிறக்குவேன். அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்துவேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளு 11

## யாழ். கரையோரங்களை ஆராய்ந்த பாக். தூதுவர்!

யாழ்ப்பாணம், நவ.24
வடக்கு மாகாணத்துக்கு இருநாள் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் நேற்று யாழ்ப்பாணம் கடற்கரையோரங்களுக்குச் சென்று நிலைமைகளை அவதானித்துள்ளார். 11

## யாழ். - சீனா பல்கலைகளிடையே ஏற்படவிருந்த ஒப்பந்தம் இரத்து!

யாழ்ப்பாணம், நவ. 24
யாழ். பல்கலைக்கழகத்துக்கும், சீன விவசாயப் பல்கலைக்கழகத்துக்குமிடையில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இணையவழியில் 11

## தலைவர் பிரபாவின் வீட்டுக்கு காவலிருக்கும் படையினர்

யாழ்ப்பாணம், நவ.24
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் இல்லத்துக்கு முன்பாக இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 12

## ம. எண்ணெய் வழங்கல் இரு நாள்களில் சீராகும்

### ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் தகவல்

கொழும்பு, நவ.24
மண்ணெண்ணெய் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தாமதம் இன்னும் இரு நாள்களில் சீராகும் 10

## புதுமுக மாணவன் உட்பட நால்வருக்கு வகுப்புத் தடை

யாழ்ப்பாணம், நவ. 24
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் மாணவர்களிடையே இடம்பெற்ற கைகலப்பு தொடர்பில் 4 மாணவர்களுக்கு 12

## தீருவிலில் இராணுவத்தினர் சிரமதானத்துக்கு இடையூறு

யாழ்ப்பாணம், நவ.24
வல்வெட்டித்துறை, தீருவிலில் மாவீரர் நினைவேந்தலுக்காக துப்புரவுப் பணிகளில் ஈடுபட்ட 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போதைப்பாவனையைக் கட்டுப்படுத்த

# பாடசாலைகளைச் சூழ புலனாய்வுப் பிரிவினர்

**கொழும்பு, நவ. 24**

**பாடசாலை மாணவர்களிடையே அதிதீவிரமாகப் பரவிவரும் போதைப்பாவனையைக் கட்டுப்படுத்தும் வகையில் போதைப் பொருள்களை மாணவர்களுக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களை கைதுசெய்வதற்காக பாடசாலைகளைச் சுற்றி புலனாய்வுப் பிரிவினர் களமிறக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

மாணவ சமுதாயத்தில் தற்போது போதைப்பொருள் பாவனை வீதம் அதிகரித்த வண்ணமே உள்ளது.

போதைப்பொருளைத் தடுக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் முன்வைக்கப்படினும் பல்வேறு சட்டங்கள் இருப்பினும் அதனை முற்றாக ஒழித்துவிட முடியாதுள்ளது.

இளம்வயதினரில் 13 தொடக்கம் 20 வயதுக்கிடைப்பட்ட மாணவர்கள் பலர் போதைப்பொருள்களுக்கு அடிமையாகியுள்ளனர் எனப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு தெரிவிக்கின்றது.

கடந்த காலங்களில் பாடசாலை மாணவர்களிடமிருந்து போதைக் காகப் பயன்படுத்தப்படும் மாத்திரைகள் மற்றும் போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

அதன்படி பாடசாலை மாணவர்களுக்குப் போதைமாத்திரைகள் உள்ளிட்ட போதைப்பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கென பாடசாலைகளைச் சுற்றி கண்காணிப்பதற்கு புலனாய்வுப் பிரிவினர் களமிறக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (ச-இ)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி மாமியைக் கொன்ற மருமகன்

### நுவரெலியாவில் சம்பவம்

கொழும்பு, நவ. 24



மாமியாரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொடூரமாகக் கொலைசெய்த குற்றச்சாட்டில் மருமகன் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நுவரெலியா - வலப்பனை, கலங்கவத்தை பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் நிவாரணப் பொருள்கள் பகிந்தளிக்கப்பட்டன. அதனைப் பெற்றுக்கொள்ள மகள், மருமகன், மாமியார் ஆகிய மூவரும் சென்றபோது அங்கு ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது.

இதன்போதே மறைத்து வைத்திருந்த கூரிய ஆயுதத்தால் மருமகன், மாமியாரைத் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரான மருமகனை கைதுசெய்ததுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

### காரைநகர் பிரதேசசபையின் பட்ஜெட்

## 9 வாக்குகளால் நிறைவேறியது

யாழ்ப்பாணம், நவ. 24

காரைநகர் பிரதேசசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 9 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. காரைநகர் பிரதேசசபையின் வரவு - செலவுத்திட்டத்தின் வாக்கெடுப்புக்கான விசேட அமர்வு, சபையின் பிரதான மண்டபத்தில் தவிசாளர் க.பாலசந்திரன் தலைமையில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது.

இதன்போது சபையின் 11 உறுப்பினர்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்கள் வாக்கெடுப்புக்கு வருகை தராத நிலையில் அமர்வில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 3 உறுப்பினர்களும், சுயேட்சைக் குழுவின் 3 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 2 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 1 உறுப்பினருமாக 9 உறுப்பினர்கள் வரவு-செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். அதன் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (ஒ-14,125)

## பெண் ஆசிரியர்களுக்கு புடைவையே ஆடை!

### கல்வியமைச்சு சுற்றறிக்கை

கொழும்பு, நவ. 24

பாடசாலை ஆசிரியைகள் புடைவையைத் தவிர வேறு ஆடைகளை அணிந்து பணிக்கு சமுகமளிக்கமுடியாது என பொதுநிர்வாக அமைச்சு நேற்று புதன்கிழமை சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது என கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

பல பாடசாலைகளில் கடமையாற்றும் பெண் ஆசிரியர்கள் புடைவை அல்லாத வேறு ஆடைகளில் பாடசாலைகளுக்கு வருகை தந்தமையையடுத்தே இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் கடமை நிமித்தம் பாடசாலைகளுக்கு வரும்போது புடைவை அணிந்தே வரவேண்டும். அதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

பாடசாலைக் கட்டமைப்பு என்பது எமது நாட்டின் எதிர்காலமாகும். ஆசிரியர்கள் புடைவை அணியும் கலாசாரத்தை அழித்து பாடசாலைக் கட்டமைப்பை சீரழிக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது.

அரச அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் பொருத்தமான ஆடைகளை அணிந்து பணிக்கு வரலாம் என வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை ஆசிரியைகள் தன்னிச்சையாக மாற்றினால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்தச் சுற்றறிக்கை பாடசாலை ஆசிரியர்களுக்குப் பொருந்தாது- என்றார். (ச-இ)

## ஆசிரியர்களுக்கான ஆடை ஒழுக்காற்று நடவடிக்கைக்கு இதுவரை தீர்மானமில்லை!

கொழும்பு, நவ. 24

புடைவை அல்லாத சாதாரண ஆடைகளை அணிந்து பணிபுரியும் ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பில் இறுதித் தீர்மானத்துக்கு கல்வியமைச்சு வரவில்லை என கல்வியமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்க குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆசிரியர்களின் ஆடைகளில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்திருந்தார்.

ஆயினும் ஆசிரியைகள் பலர் நேற்றுமுன்தினம் புடைவை அணியாது சாதாரண ஆடைகளை அணிந்து பாடசாலைக்கு சமுகமளித்தனர்.

சட்டம் மற்றும் கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை மீறி புடைவை அணியாது சாதாரண ஆடைகளை அணிந்து பாடசாலைக்கு சமுகமளித்த ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவர்களுக்கு எதிரான நடவடிக்கை குறித்து மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் கலந்துரையாடிய பின் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (ச-இ)

# நாடாளுமன்றில் நேற்று விஜேசிறி வெளியேற்றம்

கொழும்பு, நவ. 24

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜேசிறி, சபையிலிருந்து நேற்று வெளியேற்றப்பட்டார்.

பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவை தாக்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவரை சபையில் இருந்து வெளியேறுமாறு சபாநாயகர் உத்தரவிட்டார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

வரவு- செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதம் ஆரம்பமாவதற்கு முன்னர், உள்ளூராட்சித் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் கேள்விகளை எழுப்பினார். தேர்தலொன்றை கையருகில் வைத்துக் கொண்டு எதற்காக தேர்தல் முறைமையில் கைவைக்கவேண்டும், இது தேர்தலைப் பிற்போடு வதற்கான சதியாக இருக்கலாம் என்ற தொனியில் அவர் கருத்துகளை வெளியிட்டார். இது தொடர்பில் சபையில் கருத்தாடல் உருவானது.

ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் தமது கருத்துகளை முன்வைத்தனர்.

அவ்வேளையில் நிமல் லான்சாவும், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முறைமையில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார்.

அவ்வேளையிலேயே அவருக்கும் சமிந்த விஜேசிறிக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இருவரும் கடும் சொற்போரில் ஈடுபட்டனர். இந்நிலையில், நிமல் லான்சாவை தாக்குவதற்கு சமிந்த விஜேசிறி முற்பட்டுள்ளார்.

அவரை உடனடியாக சபையில் இருந்து வெளியேற்றுமாறு சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார். பிரதமரும் இந்த வேண்டுகோளை முன்வைத்தார். இதனையடுத்து வெளியில் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது. சபையில் இருந்து வெளியேறுங்கள் என சமிந்த விஜேசிறிக்கு சபாநாயகர் உத்தரவிட்டார். இன்று (நேற்று) சபை அமர்வுகளில் அவர் பங்கேற்கக்கூடாது எனவும் குறிப்பிட்டார்.

இதனையடுத்து சமிந்த விஜேசிறி சபையில் இருந்து வெளியேறினார். அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை அவசியம் என நிமால் லான்சா கோரிக்கை விடுத்தார். இந்த சர்ச்சை முடிவடைந்த பிறகு குழுநிலை விவாதம் ஆரம்பமானது. குழுநிலை விவாதத்தின்போது செங்கோல் கீழ் இருக்கும். அவ்வேளையில் சமிந்த விஜேசிறி சபைக்கு வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழக அரசின் நன்கொடை மக்களுக்குப் பகிராது பழுதடைவு

## முல்லை - நீராவியடி மக்கள் விசனம்



**முல்லைத்தீவு, நவ. 24**

**தமிழக அரசால் நன்கொடையளிக்கப்பட்ட நிவாரணப்பொதிகள் முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப் பற்றுப் பிரதேசத்துக்குட்பட்ட நீராவியடி கிழக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் மக்களுக்குப் பகிர்ந்தளிக்காது பழுதடைந்த நிலையில் தேங்கியுள்ளன என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; இந்தியாவின் தமிழக அரசால் இலங்கையில் பொருளாதாரம் நலிவடைந்த மக்களுக்கு வழங்கவென நன்கொடையாக அரிசி, பால்மா மற்றும் மருந்துப்பொருள்கள் அடங்கிய நிவாரணப் பொதிகள் கடந்த மே மாதம் வழங்கப்பட்டு, மாவட்டங்கள் தோறும் பகிர்ந்தளிக்கப்பட்டன. அதில் முல்லைத்தீவு - கரைதுறைப் பற்று- நீராவியடி கிழக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் மக் களுக்கு வழங்காமல் 50 கிலோ அரிசி மற்றும் 7 கிலோகிராம் பால்மா பைக்கற்றுகள் ஆகியவை பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் ஒரு கிலோ அரிசியைக் கூட பெற்றுக்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்வாறான ஒருசில அரச அதிகாரிகளின் அநீதியான செயல்களால் நிவாரணப் பொருள்கள் மக்களைச் சென்றடைவதில்லை. இது குறித்து ஊடகவியலாளர் ஒருவர் மூலம் முல்லைத்தீவு மாவட்டச் செயலரின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டுசெல்லப் பட்டுள்ளது. ஆகவே உரிய அதிகாரிகள் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-19)

# பாண் விற்பனையாளர் மீது மூன்று நபர்கள் தாக்குதல்!!

யாழ்ப்பாணம், நவ. 24

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம்- காட்டுப்புலத்தில் பாண் விற்பனையாளர் மீதும் விற்பனை வாகனம் மீதும் இனந்தெரியாத மூன்று நபர்களால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் சுழிபுரம் பகுதிக்கு பாண் விற்பனைக்குச் சென்ற வாகனம் மீதும் வாகனச் சாரதியான இளைஞர் மீதும், முகத்தைக் கறுப்புத்துணியால் மறைத்துக் கட்டி வந்த மூன்று நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை- கடந்த திங்கட்கிழமை மதுபோதையில் வந்த சிலர், குறித்த பாண் விற்பனையாளரிடம் கடனாகப் பாண் கேட்டபோது, அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-14,27)

# அரியாலையில் திருடிய மாடு தொண்டைமானாறில் மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 24

அரியாலைப் பகுதியில் திருடப்பட்ட மாடு, தொண்டைமானாறுப் பகுதியில் மீட்கப்பட்டது என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரியாலைப் பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த 21 ஆம் திகதி மாடு திருடப்பட்டு இறைச்சிக்காக தொண்டைமானாறுப் பகுதியிலுள்ள பற்றைக்குள் கட்டப்பட்டுள்ளது. எனினும் மாட்டைத் திருடியவர்கள் இறைச்சியாக்காமல் மாட்டை விட்டுச் சென்றுள்ளனர். அவ்வேளை மாட்டை அவதானித்த அந்தப்பகுதி மக்கள் சிலர், மாட்டை மீட்டு வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இதனையறிந்த மாட்டின் உரிமையாளர் தனது மாடு என்பதற்கான ஆதாரங்களைப் பொலிஸாரிடம் காண்பித்து மாட்டை மீட்டார். அத்துடன் மாட்டை அடையாளங்காட்டிய நபருக்கு நன்றி தெரிவித்து சிறு அன்பளிப்பையும் வழங்கினார். இதேவேளை- அண்மைக் காலமாக மாடுகள் திருடப்பட்டு விற்பனை செய்வது அதிகரித்துள்ளது என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-14,26)

# கல்வியங்காடுப் பகுதியில் பணம், நகை திருட்டு!!

யாழ்ப்பாணம், நவ. 24

கல்வியங்காடுப் பகுதியிலுள்ள வீடொன்றில் 20 ஆயிரம் ரூபா பணம் தோடு, 30 அங்கர் பால்மா பெட்டிகள் என்பன நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திருடப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்வியங்காடு - செங்குந்தா இந்துக் கல்லூரி வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் உரிமையாளர் வீட்டைப் பூட்டிவிட்டு வேலைக்குச் சென்றிருந்த வேளையில், இனந்தெரியாத திருட்டுக் கும்பலொன்று வீட்டின் முன் கதவைக் கொத்தி உள்ளே நுழைந்துள்ளது.

அதன்பின்னர் வீட்டிலிருந்த தோடு, 20 ஆயிரம் ரூபா, 30 அங்கர் பால்மா பெட்டிகள் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளது.

வீடு திரும்பிய உரிமையாளர் வீட்டில் கொள்ளை நடந்துள்ளதை அவதானித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார். முறைப்பாட்டுக்கமைய கோப்பாய் குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14)

# வாகன வருமான வரி கட்டணம் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 24

வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் வழங்கப்படும் வாகன வருமான வரி மற்றும் உடைமை மாற்றக் கட்டணம் ஆகியவை அதிகரிக்கப்பட்டுள்ளன என வடக்கு மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த 14ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானிக்கமைய மோட்டார் வாகன வருமான வரி தொடர்பாக இது வரை அறவீடு செய்யப்பட்டு வந்த கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன.

அதற்கமைய வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் வாகன வருமான வரி மற்றும் உடைமை மாற்றக் கட்டணம் ஆகியவை கடந்த 21ஆம் திகதி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



# வலி.தெற்குப் பிரதேசசபையின் பட்ஜெட் நிறைவேற்றம்!

யாழ்ப்பாணம், நவ. 24

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் எதிர்ப்புகள் ஏதுமின்றி 26 வாக்குகளால் நேற்று நிறைவேற்றப் பட்டது.

தவிசாளர் க.தர்சன் தலைமையில் சபையின் பிரதான மண்டபத்தில் வரவு - செலவுத்திட்டம் தொடர்பான நேற்றைய அமர்வு இடம்பெற்றது. சபையின் 30 உறுப்பினர்களில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த நால்வரில் இருவர் சபைக்கு வருகைதரவில்லை. இதனால் 28 உறுப்பினர்களே நேற்றைய அமர்வில் கலந்துகொண்டனர். வரவு - செலவுத்திட்டம் வாக்கெடுப்புக்காக விடப்பட்டபோது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் இரு உறுப்பினர்களும் நடுநிலை வகிப்பதாக அறிவித்தனர். எதிர்ப்புகள் எதுவும் பதிவுசெய்யப் படவில்லை. இதையடுத்து 26 வாக்குகளால் வரவு - செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இதன்படி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 11 உறுப்பினர்களும், சுதந்திரக் கட்சியின் 4 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 3 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 6 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2 உறுப்பினர்களுமாக 26 உறுப்பினர்கள் வரவு - செலவுத்திட்டத்தை ஆதரித்தனர். (ம-125)

# பேராசிரியர் கைலாசபதியின் நினைவேந்தல் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 24

பேராசிரியர் க.கைலாசபதியின் 40 ஆவது நினைவேந்தல் நிகழ்வு சுழிபுரம் 'கே.ஏ.எஸ். சத்தியமனை' நூலக அரங்கத்தில் தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் 33 ஆவது நினைவு தினமான எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் இந்து கலாசாரத் துறைத் தலைவர், முதுநிலை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம் தலைமையில் இடம் பெறவுள்ள நிகழ்வில் நினைவுப் பேருரையை கலாநிதி ந. இரவீந்திரன் ஆற்றவுள்ளார். (ஒ-14)

## கந்தர்மடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகின்றது. கமிலியஸ் செலிங்கரன் (வயது-49) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் இரு பிள்ளைகளின் தந்தை.

விபத்தில் படுகாயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த வங்கியாளர் ரசல் பொன்சேகாவை அடுத்த பிரதம நிறைவேற்றதிகாரியாக அறிவித்துள்ளது இலங்கை வங்கி!

இலங்கையின் முதற்தர வங்கியான இலங்கை வங்கி, அதன் அடுத்த பொது முகாமையாளராக, பிரதம நிறைவேற்று அதிகாரியாக திரு. ரசல் பொன்சேகாவை அறிவித்துள்ளது. அதன்படி தற்போது பொது முகாமையாளராக, பிரதம நிறைவேற்று அதிகாரியாக வெற்றிகரமாகப் பணியாற்றிவரும் திரு. கே.ஈ.டி. சுமணசிறி அவர்கள் 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி ஓய்வுபெறவுள்ள நிலையில் அவருக்குப் பின்னர் திரு. ரசல் பொன்சேகா இலங்கை வங்கியின் பொது முகாமையாளராக, பிரதம நிறைவேற்று அதிகாரியாகப் பதவியேற்கவுள்ளார்.



Mr. W. P. Russel Fonseka

1990ஆம் ஆண்டு இலங்கை வங்கியில் இணைந்து 33 ஆண்டுகள் சேவையாற்றியுள்ள திரு.ரசல் பொன்சேகா, தற்போது வங்கியின் மேலதிகப் பொது முகாமையாளராகவும் பிரதம நிதி அதிகாரியாகவும் உள்ளார். ஒரு தொழில் முறை வங்கியாளரான திரு. ரசல் பொன்சேகா பல ஆண்டுகளாக தனது கண்காணிப்பின்கீழ் இருந்த பல்வேறு பிரிவுகளை வெற்றிகரமாக வழிநடத்தி சிறந்தொரு தலைமைத்துவத்தை வழங்கியுள்ளார். அந்த வகையில் திரு. பொன்சேகா அவர்கள் பிரதம நிதி அதிகாரி, நிதி மற்றும் திட்டமிடல் பிரிவின் தலைவர், சர்வதேசம், திறைசேரி மற்றும் முதலீடுகள் பிரிவின் தலைவர், சில்லறை வங்கிப் பிரிவின் தலைவர் மற்றும் பெருநிறுவன மற்றும் கடல்கடந்த வங்கிப் பிரிவின் தலைவர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

இந்நாடும் உலகமும் எதிர்கொண்டு வரும் இவ்வாறானவொரு நெருக்கடிமிக்க காலகட்டத்தில் இலங்கையின் வங்கித்துறை முன்னோடியான இலங்கை வங்கியை வழிநடத்தும் பணியை வங்கித்துறையின் பல துறைகளிலும் துறைபோந்த அறிவும் அனுபவமும் கொண்ட திரு. பொன்சேகா அவர்கள் தலைமேற்கொள்வது வங்கித்துறைக்கு நன்மையபக்கவல்லதாகும்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத் துறையில் B.Sc (சிறப்பு) பட்டமும், அவுஸ்ரேலியாவின் தெற்கு குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் MBA பட்டமும் பெற்றுள்ள இவர், இலங்கை வங்கியின் அடுத்துப் பதவிக்கு வருவோருக்கான திட்டமிடலின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களைத் தயார்ப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக, அமெரிக்காவின் ஹார்வர்ட் வியாபாரக் கல்லூரியில் உயர் முகாமைத்துவக் கற்கைகள் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றையும் முடித்துள்ளார்.

திரு. ரசல் பொன்சேகா இலங்கை வங்கியாளர்கள் நிறுவகத்தின் மூத்த உறுப்பினராகவும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் உறுப்பினராகவும் உள்ள அதேவேளை இலங்கைக் கணக்கியல் மற்றும் கணக்காய்வுத் தரநிலைக் கண்காணிப்புச் சபையின் உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

AAT Sir Lanka இன் முன்னாள் தலைவராக விளங்கிய திரு. ரசல் இலங்கை வங்கியின் பல இணை மற்றும் துணை நிறுவனங்களின் சபைகளின் பணிப்பாளராகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிலவும் நெருக்கடியான சூழ்நிலையில் இலங்கைப் பொருளாதாரத்தின் தூணாம் இலங்கை வங்கியை அடுத்த கட்டத்தை நோக்கி வழிநடத்துவதும் அதனூடாக நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் கரங்கொடுப்பதுமே திரு. ரசல் பொன்சேகாவின் கண்முன் இருக்கும் இலக்குகளாகும்.

# நடேஸ்வராக் கல்லூரியில் விளையாட்டு அரங்கு திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 24

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் க.தனபாலசிங்கம் ஞாபகார்த்த விளையாட்டு அரங்க திறப்பு நிகழ்வு இன்று வியாழக்கிழமை நண்பகல் 12.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கு.விமலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் க.ஜெயபாலசிங்கம், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞா.ஆதவன், கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா, கனடா பழைய மாணவர் சங்க பொருளாளர் மா.நிர்மலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

# மட்டக்களப்பின் வளங்களை அழிக்கின்றார் சந்திரகாந்தன்

## சாணக்கியன் குற்றச்சாட்டு; நாடாளுமன்றில் சொற்போர்

கொழும்பு, நவ. 24

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுவின் தலைவரான சந்திரகாந்தன் (பிள்ளையான்) மட்டக்களப்பின் வளங்கள் அழிவடைவதற்குக் காரணமாக இருக்கின்றார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குற்றஞ்சாட்டினார். இதையடுத்து இருவரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உரையாற்றுகையில், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரான இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் செய்யும் மோசடியைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கையை எடுங்கள். முடிந்தால் அவரது திருட்டைத் தடுத்து நிறுத்துங்கள்"- என்றார்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன், "சாணக்கியன் தொடர்ந்து எனது பெயரைப் பயன்படுத்தி பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார். முறையற்ற வகையில் தாழ்த்திப் பேசவேண்டாம்" என்றார். அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தனது உரையில்:

நாடாளுமன்றத்தில் பேச்சு உரிமை உள்ளது. இவருக்கு ஆதரவான நிறுவனமொன்றினூடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயத்துறை அழிக்கப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு இவர் பெரும் தடையாக உள்ளார். மறுபுறம் வீதி அபிவிருத்தி என்ற போர்வையில் அரச நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் இயற்கை வளங்கள் சூறையாடப்படுகின்றன- என்றார். (ச-இ)

# இலவன்குடா போராட்டக்காரர் மீது பொலிஸில் முறைப்பாடு!

மன்னார், நவ. 24

பூநகரி - இலவன்குடா போராட்டக்காரர்களுக்கு எதிராக கிராஞ்சி மீனவர் சங்கத் தலைவரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து போராட்டக்காரர்களில் மூவரைப் பொலிஸார் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

கிளிநொச்சி- கிராஞ்சி, இலவன்குடா கடலில் தமது பாரம்பரியத் தொழில்கள் பாதிக்கப்படும் வகையில் சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளை அமைத்து தொழில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளை அகற்றக்கோரி பூநகரி- இலவன்குடா மக்கள் 52 நாள்களுக்கு மேலாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் பூநகரி- இலவன்குடா போராட்டக்காரர்களுக்கு எதிராக கிராஞ்சி மீனவர் சங்கத் தலைவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ச-213)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** இன்று எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்பட வேண்டிய நாள். முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்து விடவும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் இடையூறுகளும் நீங்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். பிரமுகர் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனைகேட்டு வருவார்கள். மனக்கசப்புகள் நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**துலாம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது அவசியம்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், திடீர் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை வாங்கித் தந்து அவர்களை உற்சாகப்படுத்துவீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்குத் திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முடிவு எதுவும் இன்று எடுக்க வேண்டாம்.

**மீனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஒரு வித்தியாசமான அமர்வு

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில், நாடாளுமன்றின் நேற்றைய அமர்வில் சில காத்திரமான கருத்துப் பரிமாற்றங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. வழக்கமான அரசியல் சதிராட்டங்களை விடுத்து நேருக்கு நேராகவும், முகத்துக்கு முகமாகவும் இந்த விவகாரத்தை நாடாளுமன்றத்தில் நேற்றுக் கையாண்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. விமல் வீரவன்ஸவின் அணியைத் தவிர ஏனைய யாவரும் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதையும் அதற்குரிய நகர்வுகள் கூடிய விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதையும் கொள்கையளவில் ஏற்றிருக்கின்றனர். விமல் அணிகூட கடுமையான எதிர்ப்பைப் பதிவுசெய்யவில்லை. வழக்கமான 'ஒற்றையாட்சி' 'படையினரின் உயிர்ப்பலி' உள்ளிட்ட இன்னபல விடயங்களைத்தான் அவர்களும் பிடிமானமாக வைத்திருந்தனர். ஒப்பீட்டளவில் நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வு கொஞ்சம் வித்தியாசமானது. ஏதோ ஓர் எதிர்பார்ப்பை ஏற்படுத்தவல்லது.

இலங்கையின் பொருளாதாரச் சிதில நிலைக்கு, இனப்பிரச்சினை தீர்க்கப்படாதமைதான் முக்கியமான காரணம் என்பதை இலங்கையின் அத்தனை அதிகாரப் பீடங்களும் வெளிப்படையாகவே ஏற்றிருந்தன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒருபடி மேலேசென்று எதிர்வரும் சுதந்திர தினத்துக்குள் தமிழர்களின் அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு நிரந்தரத் தீர்வொன்று வழங்கப்படும் என்று திரும்பத்திரும்ப வலியுறுத்தியிருந்தார். இந்த வலியுறுத்தலின் சாத்தியப்பாடுகள் தொடர்பில் சந்தேகங்கள் வலுவாக எழுப்பப்பட்டிருந்த நிலையில்தான் நேற்றைய நாடாளுமன்ற அமர்வு ஒரு திருப்பத்தை ஏற்படுத்த வல்லதாக – ஓர் உரையாடலை ஆரம்பிக்க அத்திபாரமிடக்கூடியதாக அமைந்திருக்கின்றது.

மைத்திரி – ரணில் கூட்டாட்சிக் காலத்திலும், அதன் பின்னரும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட போதெல்லாம் பெரமுனவே அதற்குத் தடைபோட்டது. ஆதலால், இனப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சியில் ரணில் ஆத்மார்த்தமாகவே ஈடுபடுகின்றாரென்றாலும், 'அவர் தற்போது சார்ந்திருக்கும் பெரமுனவிடம்' அதற்குரிய விருப்பு இல்லையேல், அது தீர்வுக்கு வைக்கப்பட்ட முற்றுப்புள்ளியாகவே அமையும். இதை வெளிப்படையாகவே மனோ கணேசன் வலியுறுத்தினார். இந்தச் 'செக்' வலுவாகவே எதிரொலிக்க, பெரமுனவின் பிரதிநிதியாக எழுந்து '13 பிளஸூக்கு' தயார் என்று அறிவித்திருக்கின்றார் மஹிந்த.

இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தேடமுற்பட்ட போதெல்லாம் எழுந்த எதிர்ப்பலை உண்மையில் நேற்று இல்லவேயில்லை. நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத்திட்டம் மீதான விவாதங்கள் முடிந்த பின்னர் மிகக்குறுகிய அவகாசத்துக்குள் தீர்வு தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது பந்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் பக்கம். 'சுதந்திர தினத்துக்கு முன்பாகத் தீர்வு' என்ற ஜனாதிபதியின் எண்ணவோட்டத்துடன் விரும்பியோ விரும்பாமலோ ஒன்றித்து, விடயத்தைக் கொஞ்சமும் ஆறப்போடாமல் செயலாற்ற வேண்டியது தமிழ்ப் பிரதிநிதிகளின் தற்போதைய காலக்கடமை. இதன் அர்த்தம் 'தருவதைப் பெற்றுவாருங்கள்' என்பதல்ல. 'பேச்சைத் தவறவிடாமல் எமது உரிமைகளைக் கேட்டுப்பெறுங்கள்' என்பதே.


சிறுபான்மை மக்களின் அரசியல் வேணவாக்களை மதித்து அவர்களுக்கு ஒரு தீர்வைக் கொடுக்கும் விருப்பு தென்னிலங்கைத் தலைவர்களிடம் இப்போதாவது ஏற்பட்டிருப்பின், இலங்கை வரலாற்றில் இந்த ஆண்டு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும். அல்லாது விடின் பத்துடன் பதினொராவது தடவையாக சிங்களம் மீண்டுமொருமுறை எம்மை ஏமாற்றும். எமக்கு இது புதிதல்ல. ஆனால், கொழும்பால் ஏமாற்றப்படும் படிப்பினை சர்வதேசத்துக்கும் தேவைதானே?.

## வடமாகாண மரநடுகை மாதம் நவம்பர் 2022

"நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது"

– இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)





# ஜனாதிபதியின் கரங்களை பலப்படுத்துவதற்கு வருக!

## பிரதமர் தினேஸ் அழைப்பு



**கொழும்பு, நவ. 24**

**வீழ்ச்சியடைந்த எமது நாட்டை மெல்லமெல்ல முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் தீர்க்கமான ஒரு தலைவரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இந்த நிலையில், எதிரணியினர் கட்சி வேறுபாடுகளை மறந்து நாட்டின் நன்மை கருதி ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்த முன்வரவேண்டும் - இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் பிரதமர் தினேஸ் குணவர்த்தன.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பும் பெரும்பான்மையுடன் நிறைவேறும். அதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. தற்போதைய நிலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாட்டைப் பற்றியே சிந்திக்கவேண்டும். வாக்களித்த மக்களின் நலனைப் பற்றியே கவனம் செலுத்த வேண்டும். ஆனால், எதிர்க்கட்சியினர் அதற்கு மாறாகச் செயற்படுகின்றனர். அவர்கள் தங்களைச் சுயபரிசோதனை செய்யவேண்டும். என்னதான் சவால்கள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு இந்த அரசு தொடர்ந்து வெற்றிப்பாதையில் பயணிக்கும்' - என்றார். (ம-22)

# சிறிதம்ம தேரருக்கு நீதிமன்றம் பிணை!

கொழும்பு, நவ. 24

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த, அனைத்துப் பல்கலைக் கழக பிக்குகள் ஒன்றியத்தின் தலைவர் கல்வெள சிறிதம்ம தேரர் கொழும்பு நீதவான் நீதிமன்றால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகே, அனைத்துப் பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியத்தின் தலைவர் கல்வெள சிறிதம்ம தேரர் ஆகியோர் கடந்த மாதம் 21 ஆம் திகதி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். இந்த நிலையில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரத்தின் அடிப்படையில் சிறிதம்ம தேரருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகே சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கப்பெறும் வரையில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம)

நாளை 25.11.2022 வெள்ளிக்கிழமை கார்த்திகை 09

சுபநேரம் : 06.12 - 07.42

ராகுகாலம்: 10.42 - 12.12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## தங்கராசா சிவபாக்கியம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா சிவபாக்கியம் நேற்று (23.11.2022) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், தங்கராசாவின் அன்பு மனைவியும், தர்மசிறி, தர்மசீலன், தர்மரூபன், தயானந்தன், தயாளரஞ்சினி, தயாளரூபி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஞ்சிதமலர், சுதர்சினி, தேவரஞ்சினி, கிருஸ்ணபவான், அபிமன்னன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், இராசமணி, மகேஸ்வரி, காலஞ்சென்ற நடராசா, செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரியும், செல்வசிலோண்மணி, சந்திராதேவி, காலஞ்சென்றவர்களான இராசமணி, சிவராசா, சுப்பிரமணியம், அரிச்சந்திரன், செல்வச்சந்திரன், சிறிகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கேதுஷா, மதுர்சன், கர்ஷன், ஆதீசன், சாய்கிரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2022) வியாழக்கிழமை 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 129 8846

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 12 . 1935



மறைவு 21 . 11 . 2022

## கந்தையா சிவராசா

(ஓய்வுபெற்ற உப அதிபர், அரியாலை, ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, இணைச் செயலாளர், நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசஇராஜேஸ்வரி பேய்ச்சி அம்மன் ஆலயம்)

நாயன்மார்கட்டு அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவராசா (ஓய்வு பெற்ற உப அதிபர், அரியாலை, ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, இணைச் செயலாளர், நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசஇராஜேஸ்வரி பேய்ச்சி அம்மன் ஆலயம்) கடந்த (21.11.2022) திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் கந்தையா தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், செல்லத்தம்பி - அம்மாக்குட்டி தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவகுமார் (இலண்டன்), சுகுமார் (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்சினி, கோஷல்யா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், இரகுபதி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பத்மராணி, காலஞ்சென்றவர்களான துரைராசா, திலகரத்தினம், இராஜேஸ்வரி மற்றும் ரேவதி (குட்டி அம்மா) முருகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், பைரவி, நர்த்தனன், ஜெனதன், அபிநயா, நிதிலா, விஷான் ஆகியோரின் அன்புப் பேரனும், ராஜ்குமார், ரஜனி, ரஜனிக்காந், ராஜேந்திரகுமார், ஜெயக்குமார், தர்சினி, ஜீவகுமார், நந்தகுமார், சுபாசினி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2022) வியாழக்கிழமை முற்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29, வைரவர்கோவில் வீதி,
நாயன்மார்கட்டு, அரியாலை.

(CS 47797 ) (3/6)

தகவல் :
குடும்பத்தினர்
T.P : 021 221 1140

# மரண அறிவித்தல்

## திருமதி சரசு தங்கராசா (கட்டுவன்)



பங்கிரை, கட்டுவனைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரசு தங்கராசா நேற்று (23.11.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - பாறுவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தங்கராசா (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2022) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் ஓட்டுமடத்தில் உள்ள இன்பம் மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மலர்வு 30.01.1938
உதிர்வு 23.11.2022

531/3, மில் வீதி,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மை.நந்தினி (பெறாமகள்),
சு.தளையசிங்கம் (பெறாமகன்)
077 900 1940

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம்
## வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை
## வவுனியா மாவட்டம்

2023 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 169 இன் கீழ் பொதுமக்கள் பார்வைக்காக 25.11.2022 ஆம் திகதி தொடக்கம் 09.12.2022 ஆம் திகதி வரையிலான அலுவலக நாட்களில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.15 மணிவரை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

### 2023ம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட அறிக்கை வருமானம்

| | | |
|---|---|---|
| சபையின் சொந்த வருமானம் | 31,565,090.00 | |
| வருமான நன்கொடைகள் மற்றும் மீள்நிரம்பல்கள் | 48,112,805.00 | |
| மூலதனப் பெறுகைகள் | 20,065,000.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் | | **99,742,895.00** |

### செலவினம்

| | | |
|---|---|---|
| மீண்டெழும் செலவுகள் | 77,032,305.00 | |
| மூலதன செலவுகள் | 22,710,000.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த செலவினம் | | **99,742,305.00** |

சு.ஜெகதீஸ்வரன்
தவிசாளர்,
வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை. 24.11.2022

(in 18266) (2.6)

## வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி
## பதவி வெற்றிடம்

| பதவி | கல்வித்தகைமை / அனுபவம் |
|---|---|
| 1 × திட்ட முகாமைத்துவ கணக்கு அலுவலகர் (ஒருவருடம்) | ➢ பல்கலைக்கழகபட்டம்/அதற்கு இணையான தகைமை :- முகாமைத்துவ கணக்கீடு /வர்த்தகம்<br>➢ MSOfficeமென்பொருள்,கணக்கியல்மென் பொருள் (quickbook, others) கையாளும் திறன்.<br>➢ தரவுகளை பகுப்பாய்வு செய்யும் திறன்.<br>➢ திட்டஅறிக்கைஎழுதுதலும், தொடர்பாடல்திறனும், (ஆங்கிலம்,தமிழ்)<br>➢ சந்தைப்படுத்தல் தொடர்பான போதிய அறிவு<br>➢ கோரப்படும் பதவி நிலையில் நான்கு வருடத்திற்கு குறையாத முன் அனுபவம்.<br>➢ கூட்டுறவுத்துறை தொடர்பான அனுபவத்திற்கு முன்னுரிமை. |

விண்ணப்பதாரிகள் lk.ncdb@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு /நேரில் தொடர்பு கொண்டு தங்கள் பதவிநிலைக்கான விதிமுறைகள் மற்றும் விண்ணப்பப் படிவத்தை கோரவேண்டும். மார்கழி 01ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங் களை சமர்ப்பித்தவர்கள் மட்டுமே நேர்காணலுக்கு உள்வாங்கப்படுவர்.

வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி,
முதியோர் இல்ல வளாகம்,
கைதடி. தலைவர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 01 . 1930



மறைவு
20 . 11 . 2022

## திருமதி அன்னபூரணம் நாகரத்தினம்

யாழ். தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட அன்னபூரணம் நாகரத்தினம் அவர்கள் கடந்த (20-11-2022) ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், தில்லைவனம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மயில்வாகனம் நாகரத்தினம் (பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், குணரத்தினம், அரசரத்தினம், கலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜீவபகீரதி, கிருஷ்ணமணி, சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நிர்விகா, அரன், சிரேயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் இராசம்மா (புன்னாலைக்கட்டுவன்), சிவசுப்ரமணியம் (பன்னாலை), ஆறுமுகநாதன்(தெல்லிப்பழை), பரம்சோதி (தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், தம்பிராசா, உமாபதிதேவி மற்றும் நகுலேஸ்வரி (தெல்லிப்பழை), தவநாதன்(தெல்லிப்பழை), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பூமணி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம், திருக்குமார் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், சிவபாலன் (கொழும்பு), காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் ஸ்கந்தராஜா (கொழும்பு), அருந்ததிதேவி (பிரித்தானியா), திருவருட்செல்வி (கனடா), சத்தியசீலன்(ஐக்கிய அமெரிக்கா), புனிதவதி (புன்னாலைக்கட்டுவன்), தயனொளிபவன் (பிரித்தானியா), சிவனொளிபவன்(மட்டுவில்), சகுந்தலாதேவி (புன்னாலைக்கட்டுவன்), சுமதி (மல்லாகம்), அனந்தீசன் (பிரித்தானியா) ஆகியோரின் சீனியம்மாவும், சயந்தன் (கனடா), முகுந்தன் (பன்னாலை), ஜனார்த்தனன் (தெல்லிப்பழை), காலஞ்சென்ற சிவபாதன் (பிரணவனின் தந்தை), கதிர்காமநாதன் (சரசாலை), காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் தில்லைநாதன் (தெல்லிப்பழை), அம்பிகாதேவி (தெல்லிப்பழை), செந்தில்நாதன் (தெல்லிப்பழை), கிருபவதனி (தெல்லிப்பழை), தயாளினி(பிரித்தானியா) ஆகியோரின் மாமியாரும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அஞ்சலிக்காக**
- Saturday, 26 Nov 2022 5:00 PM - 9:00 PM
- Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

- Sunday, 27 Nov 2022 8:30 AM - 9:30 AM
- Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**கிரியை Get Direction**
- Sunday, 27 Nov 2022 9:30 AM
- Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**தகனம் Get Direction**
- Sunday, 27 Nov 2022 12:15 PM
- Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

தகவல்:
குடும்பத்தினர்

**தொடர்புகளுக்கு:**

| | | |
|---|---|---|
| குணரத்தினம் | - மகன் | Mobile : +14167237563 |
| அரசரத்தினம் | - மகன் | Mobile : +16478662751 |
| கலாதேவி | - மகள் | Mobile : +19053051430 |

# மரண அறிவித்தல்

பிறப்பு
23 . 03 . 1954



இறப்பு
23 . 11 . 2022

"நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது"
பிலிப்பியர் 3 : 20

## ஆபிராகம் ஞானவெற்றி வீரசிங்கம்
## (Dr.அமலன்)

அலுப்பொல - இரத்தினபுரியினை பிறப்பிடமாகவும், உடுவில் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆபிரகாம் ஞானவெற்றி வீரசிங்கம் நேற்று (23.11.2022) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான போல் வல்லிபுரம் வீரசிங்கம் கிரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை மனுவேற்பிள்ளை (உரிமையாளர் - K.L.A. அந்தோனிப்பிள்ளை அன் சன்ஸ், பண்டத்தரிப்பு) ஞானமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் (புஸ்பா) அன்புக் கணவரும், சாமுவேல் நிமலசந்திரன் (முகாமையாளர் - இலங்கை வங்கி), கிறேஸ் நிமலதர்ஷினி (எழுதுவினைஞர் - இலங்கை வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானமொழி (உதவிப் பணிப்பாளர் - மத்தியவங்கி), ஜெயகாந்தன் (விவசாய போதனாசிரியர் - கைதடி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அரசிமலர் மற்றும் இன்பமலர், Dr.பிலிப், ஜேகப், காலஞ்சென்றவர்களான டானியேல், டேவிட் மற்றும் யோகமலர், நளினமலர், பிறேமமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோசுவா, ஸேன், யொஸ்வின், அஸ்லின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை 25.11.2022 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, இலங்கை பெந்தேகோஸ்தே சபையின் பிப்பிலி சேமக்காலை மானிப்பாயில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அமலன் டிஸ்பென்சரி,
உடுவில், மானிப்பாய்.
[illegible] 070 716 8298

தகவல்:
குடும்பத்தினர்

(cs.47815) (6.2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவன ஊழியர்
**திரு.இ.சிவனேசன்** அவர்களின்
அன்புத் தந்தையார்

## திரு. சபாபதிப்பிள்ளை இராசவல்லவன்

அவர்கள் கடந்த 23.11.2022 இறைபதம் அடைந்த செய்தி அறிந்து மிகுந்த மனவருத்தம் அடைவதோடு அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

**NEW SCIENEN HALL**
நிர்வாகி, ஆசிரியர்கள், ஊழியர்கள்.

(IN.18267) (2.6)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations எமது கிராமத்தைச் சேர்ந்த Congratulations
**திரு. தருமலிங்கம் பிரதீபன்**




அவர்கள் யாழ். மாவட்ட நீதிபதி S.சதீஸ்தரன் முன்னிலையில் **சமாதான நீதவானாக** கடந்த **(26.10.2022)** அன்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். மேலும் பல சமூக சேவைகளை சிறப்பாக செய்வதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**நலன் விரும்பி**
**கொற்றாவத்தை,**
**V.V.T.**

(21516) (2.6)

# வரவு செலவுத்திட்டம் 2023
# வலிகாமம் தெற்கு பிரதேசசபை

1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 168ம் பிரிவிற் கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 2022.11.24 திகதி தொடக்கம் 2022.11.30ம் திகதி வரை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இதனை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம் சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்களிலும் சுன்னாகம், உடுவில், ஏழாலை பொது நூலகங் களிலும் பார்வை யிடலாம் என்பதனை அறியத்தரு கிறேன்.

**க.தர்ஷன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

(in 18272) (2.6)

# மரண அறிவித்தல்



**பிறப்பு** **21.11.1940** **இறப்பு** **23.11.2022**

## சின்னத்துரை குணநேசசெல்வி

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை குணநேசசெல்வி நேற்று (23.11.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து முத்துப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை அவர் களின் அன்பு மனைவியும், ஜெயவசந்தன் (கனடா), வத்சலா, ஜான்சி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மிதிலா (கனடா), சுரேந்திரன் (Lankem-Area Manager), வசந்த ராஜன் (கனடா) ஆகியோரின் மாமியாரும். கஜானன், கபிஷ்னா, லிசானி, கேதாரன், ரிஷானி, நவீசன், குருவர்ஷன் ஆகி யோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோம் பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 5537 982**

(CS 21960) 1/6

# பெறுகைகளுக்கான அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

## வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு வழங்குவதற்கான பெறுகைகள்- 2023.01.01 தொடக்கம் 2023.06.30 வரை

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு வழங்குவதற்குத் தகைமை யுள்ள விலைமனு தாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவைவழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01. | DH/CM/2023/01 தொடக்கம் 17 வரை | சமைத்த உணவு வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலைகள் (யாழ் மாவட்டம்) | 8,000.00 |
| 02. | D/JF/2023/02 | உலர் உணவுவழங்கல் சேவை | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை | 57,000.00 |
| 03. | D/JF/2023/03 | | பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை | 10,000.00 |
| 04. | D/JF/2023/04 | | ஆதாரவைத்தியசாலை, சாவகச்சேரி | 54,000.00 |
| 05 | D/JF/2023/05 | | பிரதேச வைத்தியசாலை, சங்கானை | 10,000.00 |
| 06 | D/JF/2023/06 | | ஆதாரவைத்தியசாலை, ஊர்காவற்துறை | 23,000.00 |
| 07 | D/JF/2023/07 | | பிரதேசவைத்தியசாலை, நெடுந்தீவு | 5,000.00 |
| 07 | D/JF/2023/08 | | பிரதேசவைத்தியசாலை, அச்சுவேலி | 8,000.00 |
| 08 | D/JF/2023/09 | | பிரதேசவைத்தியசாலை, கோப்பாய் | 17,000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.
02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
    அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் /சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
03. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 –பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, 572/3 வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம்** எனும் முகவரியிலும் 0212223725,0212226253,0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இம் முகவரியில் வேலைநாட்களில் 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரைபரிசீலிக்கமுடியும்.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிராந்தியசுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனையாழ்ப்பாணம்**எனும் முகவரியில் 25.11.2022 ஆம் திகதி முதல் 09.12.2022 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாகச் ரூபா3,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
06. பெறுகை ஆவணங்கள் 12 ஆம் திகதி டிசம்பர் 2022 அன்று காலை10.00மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் விலைமனுதாரர் களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 06 ஆம் திகதி டிசம்பர் 2022 ஆம் திகதி காலை10.00 மணிக்கு நடைபெறும்.
08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும்.என்பதுடன் இப்பிணைப்பணம் வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.
09. இவ் விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர்,**
**பிராந்தியபெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**யாழ்ப்பாணம்**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966**
**தொலைநகல்: 021-222-9971**
**மின்னஞ்சல்: [illegible]15@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
15 . 10 . 1953



இறப்பு
23 . 11 . 2022

## தியாகராசா புஸ்பராணி

மூளாய் தெற்கு, மூளாயை பிறப்பிடமாகவும், பிரம்படி லேன், கொக்குவிலை தற்போதய வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா புஸ்பராணி அவர்கள் நேற்று (23.11.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா நாகரத்தினம் தம்பதியரின் மகளும், தேவராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற பத்மராணி மற்றும் கணேசராசா, ஜெயராசா ஆகியோரின் சகோதரியும், கணேஸ், சிவகாமி, சரவணன், பரமேஸ்வரன் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2022) வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 21968 )1-6

# மரண அறிவித்தல்

பிறப்பு
11 . 04 . 1951



இறப்பு
23 . 11 . 2022

## சின்னத்துரை வாமதேவன்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், உதயநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை வாமதேவன் அவர்கள் நேற்று (23.11.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற பேரம்பலம் செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற உலகேஸ்வரி (கிளி) அவர்களின் ஆருயிர் கணவரும், சுபாகரன், காலஞ்சென்ற சுதர்சன் மற்றும் சுதன், காலஞ்சென்ற சுகந்தன் மற்றும் சுகிர்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுஜிதா, காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் கஜா, ரவிக்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சானுஜா, சந்தோஸ், சயாணி, சர்வின், சர்ணிகா, சர்நிஷா, சாருஜன், சங்கீத், சிவானி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற லீலாவதி (சிந்தா) மற்றும் செல்வரட்ணம் (பயில்வான்), காலஞ்சென்ற கோபால் மற்றும் துரைசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான தனலட்சுமி, தணிகாசலம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.11.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் உதயநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


இல.350, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்
077 1140 472

(CS 2[illegible]5) 1/6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 06 . 1929



மறைவு
23 . 11 . 2022

## சுவாமிநாதபிள்ளை வாமதேவன்

(ஓய்வுபெற்ற புகையிரத சாரதி)

அனுராதபுரத்தை பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதபிள்ளை வாமதேவன் அவர்கள் நேற்று (23.11.2022) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமிநாதபிள்ளை செல்வராசம் தம்பதியரின் ஏகபுதல்வனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை நீலமணி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற திலகவதியின் அன்புக் கணவரும், ஞானகலாவதி (கனடா), Dr.சித்திரா, விக்கினேஸ்வரன், ரோகினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனேந்திரன் (கனடா), Dr.கடம்பநாதன், சேவியர், ஜெயராஜ் (பிரான்ஸ்), அருள்நிதி ஆகியோரின் அன்பு மாமனாரும், அமுதினி, அபிநவன், அனந்தன், அனீஷா, அட்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனாரும், சோபியா ஐஸ்னவியின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"முருகோதயம்"
1ஆம் ஒழுங்கை, அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 21964) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 03 . 1951



மறைவு
23 . 11 . 2022

## திரு.கந்தையா தர்மலிங்கம்

(உரிமையாளர் நியூ குறிஞ்சி பாமசி - திருநெல்வேலி)

மாவடி வீதி, சுதுமலை தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கந்தையா தர்மலிங்கம் (உரிமையாளர் நியூ குறிஞ்சிபாமசி - திருநெல்வேலி) அவர்கள் நேற்று (23.11.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (25.11.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாவடி வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
021 225 5204, 077 881 420

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாவாழ்த்துக்கள்

Best Wishes **24.11.2022** Best Wishes



ஆசிரியை
திருமதி
## நகுலேஸ்வரி சிறீராசா
(ஆரம்பக் கல்வி ஆசிரியை)

**சேவை விபரம்:**
- 21.10.1988 - 04.02.1991
  யா/ எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலயம்
- 05.02.1991 - 31.12.1992
  கோப்பாய் ஆசிரிய கலாசாலை
- 01.01.1993 - 31.12.2003
  யா/ எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலயம்
- 01.01.2004 - 05.06.2013
  யா/ மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை
- 06.06.2013 - 23.11.2022
  யா/ மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்

Congratulations

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்,
பெற்றோர், நலன்விரும்பிகள்
**யா/ மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்**

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் சுபகிருது வருஷம் ஐப்பசி 29ஆம் நாள் (15.11.2022) செவ்வாய்க்கிழமை இரவு சிவபதமடைந்த எங்கள் அன்புச் சிறிய தந்தையார்

## பிரம்மஸ்ரீ இரத்தினக்குருக்கள் நடராஜஸ்கந்தசர்மா

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

24.11.2022 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணி தசாகம்
25.11.2022 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி ஏகோதிஷ்டம், மாசியம்
26.11.2022 சனிக்கிழமை முற்பகல் 10.30 சபிண்டீகரணம்
27.11.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணி கிருஹயக்ஞம்
நண்பகல் 12.00 மணி மதிய போசனம்

மேற்படி தினங்களில் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அராலி வடக்கு, நாகேந்திரமடம்,
அராலி.
குடும்பத்தினர்.

(CS 219621)-6

## முல்லைத்தீவு கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

Mullai East palm Resources Development Co-operative Society [LTD] முல்லைத்தீவு கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தில் பின்வரும் பதவிகளுக்கு வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி - உற்பத்தி முகாமையாளர்
சம்பள குறியீடு-107/05
சம்பள அளவுத்திட்டம் -20480-310×10-345×10-27030
02. பதவி - கணிப்பக உருவாக்குனர்
சம்பள குறியீடு 322/10
சம்பள அளவுத்திட்டம் -17605-198×10-220×10-21785
03. பதவி - கிராமிய வங்கி எழுதுனர்
சம்பள குறியீடு- 300/12
சம்பள அளவுத்திட்டம் 16780-150×10-165×10-19930
04. பதவி - சாரதி
சம்பள குறியீடு- 312/13
சம்பள அளவுத்திட்டம் -16365-140×10-150×10-19265
05. பதவி - விற்பனை உதவியாளர் (வெற்றிடம் - 03)
சம்பள குறியீடு- 308/15
சம்பள அளவுத்திட்டம் -15545-130×10-140×10-18245
06. பதவி - அலுவலக சேவகர்
சம்பள குறியீடு-317/15
சம்பள அளவுத்திட்டம் -15545-130×10-140×10-18245
07. பதவி - உற்பத்தி உதவியாளர்
சம்பள குறியீடு 326/16
சம்பள அளவுத்திட்டம் -15135-120×10-135×10-17685
08. பதவி - கிளை முகாமையாளர்
சம்பள குறியீடு 208/11
சம்பள அளவுத்திட்டம் -17190-170×10-185×10-20740

* வயதெல்லையானது-18-45 வயதாகும்.

பொதுவானது - கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கு அமைய மாதாந்த இலாபத்தில் வாழ்க்கை செலவுப்படி-7800/-.செயலாற்றுகை கொடுப்பனவு-1000/- பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான தகைமைகளினை வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் இணையத்தள முகவரி www.np.gov.lk இன் சுற்றுநிருபங்கள் பகுதியில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் கீழ் http://np.gov.lk/cocoperative-employees-commission-circular- 2021 என்ற இணையத்தளத்தில் பார்வையிட்டுக்கொள்ளமுடியும். அல்லது உரிய சங்கத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்ப படிவத்தினை பெற்று முழுமையாக பூரணப்படுத்தி தலைவர். முல்லைத்தீவு கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம். கரைச்சிக் குடியிருப்பு. முல்லைத்தீவு. என்னும் முகவரிக்கு 2022.12.09 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படவேண்டும்.

- மேலதிக தொடர்புகளுக்கு :-0212290296
- பொது முகாமையாளர் :-0770523748

தலைவர்
முல்லை கிழக்கு பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

ம.எண்ணெய்...

என்று ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார். மீனவர்களின் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 74 மண்ணெண்ணெய் தாங்கிகள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அனுமதி வழங்கப்பட்டும் பணம் செலுத்தாமையால் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படாத அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் மண்ணெண்ணெய் விநியோகிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் விநியோகம் இன்று முதல் வழமைக்குத் திரும்பும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-எ-இ)

# அறிவித்தல்

அங்கத்தவர் இணைப்பு இளங்கலைஞர் மன்றத்துடன் இணைந்து கலைப்பணி செய்வதில் ஆர்வமுள்ள கலைஞர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.
விண்ணப்பப்படிவத்தை மன்றத்தில் பெற்று பூர்த்தி செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர். விண்ணப்பங்கள் 31.12.2022 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
தலைவர் / செயலாளர்
இளங்கலைஞர் மன்றம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# மணிவிழா வாழ்த்து

Congratulations Congratulations


எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி தேவகலை லோகேந்திரன் (SLTS -I)**




**சேவை விபரம்:**
- 17.08.1988 - 28.03.1993
  யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி
- 29.03.1993 - 31.12.1994
  யா/ கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
- 01.01.1995 - 07.08.2008
  யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி
- 08.08.2008 - 31.01.2012
  மேல்/களு/ அலவியா முஸ்லிம் மகாவித்தியாலயம்
- 01.02.2012 - 22.04.2018
  யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்
- 23.04.2018 - 31.12.2022
  யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்

இன்று (24.11.2022)
தனது **60 ஆவது பிறந்ததினத்தை**
கொண்டாடும் ஆசிரியையை வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
ஆசிரியர் நல்லுறவு மன்றம்
**யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்.**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
02 . 12 . 1935

மறைவு
21 . 11 . 2022

## கந்தையா சிவராசா

(ஓய்வுபெற்ற உப அதிபர், அரியாலை, ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, இணைச் செயலாளர், நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசஇராஜேஸ்வரி பேச்சி அம்மன் ஆலயம்)

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளிவிளக்கே
உற்றார் சுற்றமும்
கூடிக்கழித்த உறவுகளை
கைவிட்டுச்சென்றதேனோ
பிரிவால் வாடி நிற்கின்ற உள்ளங்கள்
தேற்ற மொழியின்றி
தவிக்கின்றதே - நின் உறவின்
அடிதேடித் துடிக்கின்றதே....

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

பிரிவால் துயருறும்
**துரைராஜா (கனடா) குடும்பத்தினர்**
**உதயன் மைத்துனர் (கனடா)**
**சாரங்கா நகை மாடம்**
**உரிமையாளரும் ஊழியர்களும்.**

(CR 38529) I/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரப்...

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. வரவு-செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதம் ஆரம்பமான பின்னர், ஜனாதிபதியும் கருத்து வெளியிட்டார்.

அதிகாரப்பகிர்வு, பொருளாதாரப் பிரச்சினை, போராட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை மாற்றம் என்பன தொடர்பில் ஜனாதிபதி கருத்துக்களை முன்வைத்தார்.

அதிகாரப்பகிர்வு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, "எதிரணிகள் ஒன்றுபட்டால் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும். இதற்கு அவர்களும் (கூட்டமைப்பு) தயார், நானும் தயார்" எனக் குறிப்பிட்டு லக்ஷ்மன் கிரியல்ல, மனோ கணேசன் ஆகியோரிடம் அவர்களின் நிலைப்பாட்டை வினவினார்.

அதற்குப் பதிலளித்த எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல, "அதிகாரப்பகிர்வுக்காகக் குரல் கொடுப்பவன் நான். எந்தக் கட்சியில் இருந்தாலும் அதிகாரப்பகிர்வுக்கு ஆதரவு" எனக் கூறினார்.

"அது எனக்குத் தெரியும், ஐக்கிய மக்கள் சக்தியில் எல்லோரும் இதற்கு இணக்கமா?, இவ்வாறு இணக்கமெனில் இன்று (நேற்று) மாலைக்குள் பிரதமருக்கு தெரியப்படுத்துங்கள்" என்று ஜனாதிபதி பதிலளித்தார்.

அப்போது எழுந்த மனோ கணேசன், "ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி அதிகாரப்பகிர்வுக்கு இணக்கம். அதனால் தான் நாம் அங்கு இருக்கின்றோம்" எனக் குறிப்பிட்டார்.

"ஜனாதிபதி அவர்களே! நீங்கள் தனிமனிதர், சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி அதிகாரப் பகிர்வுக்கு தயாரா?, மஹிந்த ராஜபக்ச 13 பிளஸ் என்றார், முடிந்தால் தற்போது எழுந்து சபைக்கு அதை அறிவிக்க வேண்டும்" என்றும் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

அப்போது, "மஹிந்த இதை எழுந்து கூறவும்" என ஜனாதிபதி கூறினார். இதை ஏற்று மஹிந்தவும் எழுந்து, தான் தயார் என்பதை வெளிப்படுத்தினார். " அப்படியானால் "நாங்கள் 13 பிளஸ்க்கு தயார்" என ஜனாதிபதி ரணில் மீண்டும் அறிவித்தார். 'இதற்கிடையில் முதலில் பேச்சுக்கு வாருங்கள்' என கிரியல்லவை, பிரதமர் அழைத்தார்.

"ஒற்றையாட்சிக்காக படையினர் உயிர் தியாகம் செய்துள்ளனர். எனவே, ஒற்றையாட்சிக்கு உட்பட்ட வகையிலான நடவடிக்கைக்கே ஆதரவு" என்று நாடாளுமன்ற உறுப்பினர் (விமல் அணி) கெவிந்து குமாரதுங்க இதன்போது குறுக்கிட்டு தன் எதிர்ப்பை பதிவு செய்தார்.

இறுதியில் டிசெம்பர் 11 ஆம் திகதிக்குப் பின்னர் இது சம்பந்தமாக சர்வகட்சிகளையும் சந்தித்துக் கலந்துரையாட கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்படும் என்று ஜனாதிபதி அறிவித்தார். (அ-எ-44)

## யாழ். - சீனா...

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருந்த நிலையில் அது இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஒப்பந்தம் கடந்த ஓகஸ்ட் மாதம் கைச்சாத்திட தீர்மானிக்கப்பட்டு, பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பால் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. சீனப் பல்கலைக்கழக மாணவர்கள் இங்கும், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சீனாவிலும் ஆய்வு செய்வதற்குரிய வகையிலேயே இந்தக் கூட்டு ஒப்பந்தத்தை மீண்டும் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதற்கு பல தரப்பினரும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். சீனப் பல்கலைக்கழகத்துடன் எந்தவொரு ஒப்பந்தமும் மேற்கொள்ளக்கூடாது என்று பல தரப்புக்களாலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தன.

இந்தப் பின்னணியில் நேற்று பிற்பகல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதை கைவிடுமாறு துணைவேந்தருக்கு அறிவித்துள்ளதாக அறியமுடிகின்றது. (அ-ஒ-5)

## மோசடியாளர்...

மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை ஊழலற்ற நாடு என்பதை சர்வதேசத்துக்கு நிரூபிக்கவேண்டும். 2015 ஆம் ஆண்டுக்கு முன்னரும், 2019ஆம் ஆண்டுக்குப் பின்னரும் இந்த நாட்டில் இடம்பெற்ற சம்பவங்களும் இதில் தாக்கம் செலுத்துகின்றன. ஊழல், மோசடிகள் தீவிரமடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்புவது இலகுவான விடயமல்ல.

2019 தேர்தல் பரப்புரையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களைக் குறிப்பிட்டு தேசியப் பாதுகாப்பை முன்வைத்து என்மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன் என்று கூறிய ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஆர்ப்பாட்டக்காரர்களால் சுற்றிவளைக்கப்பட்டது.

விரைவில் தேர்தலை நடத்துவதற்கான அவசியம் சமூக மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையிலும் தாக்கம் செலுத்துகிறது. தேர்தல் நடத்தப்பட்டால் மக்கள் ஆட்சியாளர்கள் மீது கொண்டுள்ள கோபம் சற்றேனும் குறைவடையும்.

வாக்களிப்பில் மக்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவர். தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்ற கொள்கையிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை.

நாம் நடுத்தர வருமானம் பெரும் நாடாக இருந்து , தற்போது குறைந்த வருமானம் பெறும் நாடாக பின்தள்ளப்பட்டுள்ளமை சர்வதேச மட்டத்தில் நாம் பெற்றுக் கொண்ட பெரும் தோல்வியாகும் - என்றார். (அ-எ-இ)

## ஆட்சியைக்...

மன்றத்தில் நேற்றுப் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது-

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி மற்றும் அதன் பின்னர் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அதேபோல ஆளுங்கட்சியோ, எதிரணியோ நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளைக் கொளுத்துவதற்கு இடமளிக்கமுடியாது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் வானில் இருந்து வரவில்லை. மக்களின் வாக்குகளால் வந்தவர்கள், அவர்களுக்கு சுதந்திரமாக சேவையாற்ற இடமளிக்கவேண்டும்.

ஜனாதிபதியை விரட்டினர். ஜனாதிபதி மாளிகைக்கு என்ன நடந்தது, அது இல்லாமல் செய்யப்பட்டது. அதன்பின்னர் ஜனாதிபதி அலுவலகம் கைப்பற்றப்பட்டது. பதவி விலக வலியுறுத்தி எனது வீடும் கொளுத்தப்பட்டது. நாடாளுமன்றத்தைக் கைப்பற்றுவதற்கும் முயற்சித்தனர். மக்கள் இதன் பின்னணியில் இருக்கவில்லை. எனவே, தீய சக்திகளுக்கு அடிபணிய வேண்டாம் என எதிரணிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன். அந்தச் சக்திகளை நான் கட்டுப்படுத்தினேன். என்னை சர்வாதிகாரியென விளித்தனர். 17, 19 மற்றும் 22 ஆகிய சட்டங்களை நானே கொண்டுவந்தேன். ஆனாலும் ஹிட்லர் என்கின்றனர், பரவாயில்லை.

எமது நாட்டு முறைமையே மாறவிருந்தது, அதைத் தடுத்தேன். இதன் பின்னணியில் குமார் குணரட்னவும், முன்னிலை சோஷலிஸக் கட்சியினருமே செயற்பட்டனர். முன்னிலை சோஷலிஸக் கட்சியின் தலைவர் இரட்டைக் குடியுரிமை உடையவர். போர்க் காலத்தில் இந்திய அமைதிப்படையினரைக் கொன்றார் என்ற குற்றச்சாட்டு இவருக்கு எதிராக உள்ளது.

நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரச்சினை தீர்ந்த பின்னர் தேர்தலை நடத்தலாம். முன்கூட்டியே நாடாளுமன்றத்தை கலைக்கும் எண்ணம் இல்லை. விருப்பு வாக்கு முறைமை இருக்கும்வரை ஊழல் இருக்கும். அதனால்தான் தேர்தல் முறைமை மாற்றத்தை வலியுறுத்துகின்றேன். முறைமை மாற்றம் அவசியம். அதைச் செய்வதற்கு ஒன்றுபட வேண்டும் என்று எதிரணிகளுக்கு அழைப்பு விடுக்கின்றேன். அதேவேளை, கூட்டங்களை நடத்தும் உரிமை உள்ளது. அதைச் செய்யுங்கள். என்னை ஏகாதிபதியென விமர்சியுங்கள். அது பிரச்சினை இல்லை, ஆனால், பொலிஸாரிடம் அனுமதி பெற்றுப் பேரணி நடத்துங்கள். ஏனைய வாகனங்களுக்கு இடையூறு விளைவிக்காமல் செல்லுங்கள். அனுமதியின்றி பேரணிகளை நடத்த முற்பட்டால் தடை ஏற்படுத்துவதற்குப் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த மற்றுமொரு போராட்டத்தை நடத்துவார்களாம். அதற்கு நான் இடமளிக்கமாட்டேன். இராணுவத்தைக் களமிறக்குவேன், அவசர காலச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவேன். எந்த நாளும் கத்துவதால் அவர்களுடன் நாட்டு மக்கள் உள்ளார்கள் என்று அர்த்தமில்லை-என்றார். (அ-எ-44-22)

## தீருவிலில்...

வர்களை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்தினர் செயற்பட்டுள்ளனர். துப்புரவுப் பணிகளில் ஈடுபட்ட அனைவரையும் இராணுவத்தினர் ஒளிப்படம் எடுத்தனர் என்று சம்பவ நேரத்தில் அங்கு நின்றவர்கள் தெரிவித்தனர்.

அங்குள்ள நினைவுச் சிலையைச் சூழவுள்ள பற்றைகளைத் துப்புரவாக்க முயன்றபோது, அந்த நினைவுச் சிலை புலிகளின் நினைவுச் சிலை என்று கூறி இராணுவத்தினர் அதற்குத் தடை ஏற்படுத்தியுள்ளனர். அதை மீறி அங்கு துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது மேலதிக இராணுவத்தினர் அந்த இடத்துக்கு வரவழைக்கப்பட்டனர் என்றும், வல்வெட்டித்துறைப் பொலிஸாரும் அங்கு வந்தனர் என்றும் சம்பவ இடத்தில் நின்றவர்கள் குறிப்பிட்டனர்.

அங்கு துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள வேண்டாம் என்று அச்சுறுத்தும் வகையில் கூறிய இராணுவத்தினர், துப்புரவுப் பணிகளை மேற்கொண்டவர்களை ஒளிப்படமும் எடுத்துள்ளனர். ஆயினும் வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளரும், அங்கிருந்தவர்களும் இராணுவத்தினரின் தடையை மீறி அந்த இடத்தைத் துப்புர வாக்கிச் சென்றுள்ளனர்.

தற்போது அந்த இடத்தில் 4 இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அ-எ-26)

## யாழ்...

வடமராட்சி, சக்கோட்டை கடற்கரையில் அங்குள்ள முகாமுக்கு அண்டிய பகுதிகளுக்குச் சென்ற அவர் அங்கு நீண்ட நேரம் செலவிட்டார். (அ-எ-இ)


## தேவை

யாழ். நகர் மத்தியில் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ் காணும் வேலையாட்கள் தேவை.

1). **காசாளர்** (அரச பணியிலிருந்து ஓய்வுபெற்றவர்கள் விரும்பத்தக்கது)
2). **பில் போடுபவர்** (அரச பணியிலிருந்து ஓய்வுபெற்றவர் விரும்பத்தக்கது)
3). **தேநீர் தயாரிப்பாளர்** (தங்கியிருந்து வேலைசெய்பவர் விரும்பத்தக்கது.

452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**021 2216 779, 077 913 4325**

(CS 478181)-6


## மரண அறிவித்தல்

பிறப்பு
15
10
1943



இறப்பு
21
11
2022

### திருமதி சிரோன்மணி கந்தசாமி

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், பலாலி வீதி உரும்பிராய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிரோன்மணி கந்தசாமி கடந்த (21.11.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், மற்றும் கிரிஷா (தாதியர் பொறுப்பு உத்தியோகத்தர், ICU யாழ். போதனா வைத்தியசாலை), யுதிஸ்டிரன், ஹர்ஜினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திரகுமார் (தாதியர் பொறுப்பு உத்தியோகத்தர் OPD ஆதார வைத்தியசாலை தெல்லிப்பளை), சாலினி, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், ஹரிராம், முகுந்ராம், பிருந்தன், கிசான், அபிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, குலசேகரம், மற்றும் அன்னலட்சுமி, அல்லிராணி, காலஞ்சென்ற முத்துரதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இந்திராணி, இராஜக்கோன் (திருகோணமலை), தேவராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2022) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 1822 183**

(CR 38530) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதாரண...

பேறுகளை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்தார்.

செயன்முறைப் பரீட்சைகள் நிறைவடைந்துள்ளதால் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெறுபேறுகளை வெளியிட முடியும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

2021ஆம் கல்வி ஆண்டுக்கான கல்விப் பொதுத்தர சாதாரண தரப் பரீட்சை கடந்த மே மாதம் நடைபெற்றது. அதில் 5 லட்சத்து 17ஆயிரத்து 486 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். (அ-எ-இ)

## நீருக்குள்...

மதி பிரதேசத்தைச் சேர்ந்த பாஸ்கரன் திலக்சன் (வயது-19) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் மாலை நண்பர்களுடன் பாலத்தில் இருந்து தூண்டிலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது நீரில் வீழ்ந்துள்ளார். இவரது செருப்பு நீரில் வீழ்ந்ததை அடுத்து, அதை எடுக்க முயன்றபோதே அவர் தவறி நீரில் வீழ்ந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீரில் வீழ்ந்த இளைஞர் காணாமற்போயிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவரைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் அது பயனிக்கவில்லை. இந்தநிலையில் நேற்றுக் காலை கடற்படையினரால் இளைஞரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. நீரில் மூழ்கியமையே உயிரிழப்புக்குக் காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-எ-26-23-20)

## சமிக்ஞையை...

நீதிவான் நீதிமன்றம் ஒரு மாத காலம் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

இரு வாரங்களுக்கு முன்னர் பருத்தித்துறைப் பொலிஸார் வீதிக் கடமையில் இருந்தபோது வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றை மறித்துள்ளனர். ஆயினும்மோட்டார்சைக்கிளைச்செலுத்தி வந்தவர் அதனை நிறுத்தாது சென்றுள்ளார்.

வாகன இலக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மோட்டார் சைக்கிள் உரிமையாளரைக் கண்டுபிடித்த பொலிஸார் அவர் மீது வழக்குப் பதிவு செய்தனர். பொலிஸ்கட்டளை அனுப்பப்பட்டு சந்தேகநபர்நேற்றுநீதிமன்றில்முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் 45 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், ஒருமாதகாலசிறைத்தண்டனையையும் விதித்து தீர்ப்பளித்தார். (அ-எ-26)

## ஆசிரியர்...

இரவு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

கல்லூரிக்குள் புகுந்து நடத்தப்பட்ட தாக்குதலில் ஆசிரியர் காயமடைந்தார். இந்தச் சம்பவத்துக்கு பலத்த கண்டனங்கள் எழுந்திருந்த நிலையில், உடனடியாக நடவடிக்கை எடுத்து சந்தேகநபரைக் கைது செய்ய வேண்டும் என்று ஆளுநர் பொலிஸாருக்கு பணித்திருந்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து ஆசிரியர்களால் நேற்று ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர், இந்தச் சம்பவம் தொடர்பாக நிர்வாக ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சம்பவம்நடைபெறுவதற்கு முதல்நாளான திங்கட்கிழமை ஆசிரியருக்கான இடமாற்றல் கடிதம் வலயக் கல்வி அலுவலகத்தால் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டிருந்த நிலையில், இந்தச் சம்பவம் நடந்துள்ளது - என்றார். (அ-எ-26-125)

## இ.போ.ச....

யளவில் நடந்துள்ளது. வசாவிளான் வீதியில் உள்ள தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது யாழ்ப்பாணத்தில் இருந்து வசாவிளான் நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ் மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்த மாணவன் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இ.போ.ச. பஸ் சாரதி அந்த இடத்தில் இருந்த மக்களால் தாக்கப்பட்டார் என்றும், அவர் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக பலாலிப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்ட நிலையில், சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் பஸ்ஸை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றதுடன், விபத்துச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (அ-எ-125)

## தலைவர்...

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாள் நெருங்கி வரும் நிலையிலேயே வல்வெட்டித்துறையில் உள்ள அவரது வீட்டுக்கு முன்பாகத் திடீரென இராணுவத்தினரும், பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினமான நவம்பர் 26ஆம் திகதி தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களிலும், புலம்பெயர் தேசங்களிலும் கேக் வெட்டி, இனிப்பு வழங்கிக் கொண்டாடுவது வழமை. கடந்த ஆண்டுகளில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பிறந்தநாள் கொண்டாட்டங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில், தற்போது வல்வெட்டித்துறையில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் வீட்டுக்கு முன்பாக இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அ-எ-26)

## புதுமுக...

இடைக்காலத்தடை விதிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி கிழக்கு, கலாசாலை வீதியில் கடந்த 21ஆம் திகதி, திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட சிரேஷ்ட மாணவர்களுக்கும், புதுமுக மாணவர்களுக்குமிடையில் கைகலப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. சம்பவத்தின் போது சிரேஷ்ட மாணவர்களால் புதுமுக மாணவர் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாக இடம்பெற்ற ஆரம்ப கட்ட விசாரணைகளில் சம்பந்தப்பட்ட மூன்று சிரேஷ்ட மாணவர்களுக்கும், ஒரு புதுமுக மாணவனுக்கும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில், சுதந்திரமான விசாரணை ஒன்றை முன்னெடுப்பதற்கு ஏதுவாக அடையாளம் காணப்பட்ட நான்கு மாணவர்களையும் மறுஅறிவித்தல் வரை பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பகுதிகளினுள்ளும் நுழைவதற்குத் தடை விதிக்கப்படுவதுடன், கல்வி மற்றும் பல்கலைக்கழகம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார். (அ-ஒ-5)

**பணிப்பெண் தேவை**

யாழ். திருநெல்வேலியில் தங்கியிருந்து குழந்தை பராமரிப்பதற்கு நல்லொழுக்கமுடைய பணிப் பெண் தேவை. T.P:077 308 3007

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 02.12.1935



மறைவு 21.11.2022

21.11.2022 அன்று இறைபதம் எய்திய

**கந்தையா சிவராசா**

(ஓய்வுபெற்ற உப அதிபர், அரியாலை, ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, இணைச் செயலாளர், நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசஇராஜேஸ்வரி பேய்ச்சி அம்மன் ஆலயம்)

அவர்களின் பிரிவால் துயர் அடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர் ஊழியர்கள்
டாட் என்ரபிறைசஸ்
11,12, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

Tel: 2223098
2227622

(CS 21963) 1/6

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு.

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும், வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:-
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்
077 814 7389
077 986 5457



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org